# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.92/2024

### அ.சா. 14(LW 11)

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **திரு. மரிய ராஜேந்திரன்** | **தொழில்** | |
| **த/ பெயர்** | அந்தோணிசாமி | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **03.06.2026** |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது மாரம்பாடியில் குடியிருந்து வருகிறேன். கட்டிட வேலை செய்கிறேன். கடந்த 6 வருடங்களுக்கு முன்பாக தேதி, மாதம் ஞாபகம் இல்லை. வழக்கில் இறந்த ஆரோக்கியசாமி எனது அக்கா உறவு முறையில் உள்ளவரின் கணவர் ஆவார். இறந்து போன அன்று ஆரோக்கியசாமி இறந்த இடத்தை பார்ப்பதற்காக நான் ஒத்தையூர் என்ற இடத்திற்கு நான் சென்றிருந்தேன். அப்போது வேடசந்தூர் காவல்நிலைய ஆய்வாளர் விசாரணைக்காக வந்ததற்காக என்னிடம் கையெழுத்து கேட்டார். நான் கையெழுத்து போட்டேன். பார்வைமகஜரிலுள்ள (18.07.2022 காலை 11.00 மணிக்கு) 2 வது கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் **அ.த.சா.ஆ.12.** ஆகும். அதே தேதியில் (18.07.2022 காலை 12.00 மணிக்கு) அத்தாட்சியில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் **அ.த.சா.ஆ.13.** ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**இந்நிலையில் அரசு தரப்பு வழக்கறிஞர் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி பாரதீய சாட்சிய அதிநியம் சட்டம் பிரிவு 157 ன் கீழ்குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டது. அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

ஆரோக்கியசாமியின் மனைவி பெயர் குழந்தை தெரசு என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் 18.07.2022 அன்று காலை 11.00 மணிக்கு ஒத்தையூர் , அமல்ராஜ் வீட்டின் அருகே நானும் ஆரோக்கியம் மகன் செபஸ்தியாரும் நின்று கொண்டிருந்தோம் என்றால் சரியல்ல. அப்போது வேடசந்தூர் காவல்நிலைய ஆய்வாளர் ஆரோக்கியசாமி கொலையுண்டு இறந்த இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர், வரைபடம் தயார் செய்தார் என்றும் அதில் நானும் செபஸ்தியாரும்

கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல, நான் மட்டுந்தான் கையெழுத்து செய்தேன். அதன் பிறகு காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தில் கிடந்த இரத்தம் பட்ட சுமார் 54.5 செ.மீ நீளமுள்ள மரக்கட்டை -1, டைல்ஸ் இருந்த இரத்த மாதிரியை ஒரு நூலில் எடுத்து அதை அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றாலும் அதில் நானும் செபஸ்தியாரும் கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல, நான் மட்டுந்தான் கையெழுத்து செய்தேன். தற்போது ஆஜர் எதிரிகள் எனக்கு உறவினர்கள் என்பதால் எதிரிகளை வழக்கிலிருந்து விடுவிப்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-** எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

**மறு விசாரணை - இல்லை**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.06.03 18:05:02 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.